DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KARIAPATTI

Calender Miscellaneous : ST**C.No.408/2025**

Preliminary Register :

Sessions :

Deposition of witness for : Pw.7

Name : வினோத்குமார்
Father/Husband Name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 18th day June of 2026

(எதிரி ஆஜர் இல்லை பிரிவு 317 Cr.P.C/355 BNSS ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. )

முதல் விசாரணை

நான் தற்போது மதுரை மாநகர் தனி பிரிவு குற்ற புலனாய்வு துறையில் சார்பு ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 10.03.2019 ம் தேதி காலை 09.20 மணியளவில் காரியாபட்டி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வளராக பணியாற்றி, காவல்நிலைய பொறுப்பில் இருந்த போது காரியாபட்டி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று சுமார் 09.45 மணியளவில் மருத்துவமனை சென்று அங்கு சிகிச்சையில் இருந்த திருமால்புரத்தை சேர்ந்த கருப்பையா என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்றேன். பின்னர் நிலையம் வந்து புகார் மனுவின் தன்மைகேற்ப நிலைய குற்ற எண். 105/2019 பிரிவுகள் 279, 337 இ.த.ச ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.2** முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.3**

ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் வழக்கை எனது விசாரணைக்கு எடுத்து கொண்டு அன்றைய தினமே காலை 11.00 மணிக்கு வழக்கின் சம்பவ இடம் சென்று சாட்சிகள் தங்கப்பாண்டி மற்றும் நாகராஜ் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றம் மாதிரி வரைபடம் தயார் செய்து சாட்சிகளின் கையொப்பம் பெற்று அவர்களின் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். அந்த மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அன்றே சாட்சிகள் கருப்பையா, நாராயணசாமி , திருப்பதி, ஜோதிமணி ஆகியோர்களை விசாரித்து அவர்களின் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். அன்றைய தினமே 11.30 மணியளவில் காவல் நிலையத்தில் ஆஜரான எதிரியை கைது செய்து தக்க இருநபர் ஜாமினில் விடுவித்தேன். 11.03.2019 ம் தேதி விபத்தை ஏற்படுத்திய TN 58 AB 9352 ன் பதிவெண் கொண்ட LMV காரை மோட்டார் வாகன ஆய்வுக்கு அனுப்பி வைத்தேன், 15.03.2019 ம் தேதி விபத்துகுள்ளான TN 59 BR 0866 ன் பதிவெண் கொண்ட TVS Jupiter என்ற இருசக்கர வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வுக்கு அனுப்பி வைத்தேன். அன்றைய தினமே விபத்து ஏற்படுத்திய மற்றும் விபத்துள்குள்ளான வாகனங்களை ஆய்வு செய்து ஆய்வறிக்கை வழங்கிய விருதுநகர் வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.இளங்கோ என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். TN 58 AB 9352ன் பதிவெண் கொண்ட LMV காரின் ஆய்வறிக்கை **அ.சா.ஆ.5** ஆ க குறியீடு செய்யப்படுகிறது. TN 59 BR 0866 ன் பதிவெண் கொண்ட TVS Jupiter ன் ஆய்வறிக்கை **அ.சா.ஆ.** 6 ஆ க குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் 28.05.2019 ம் தேதி வழக்கில் காயம் பட்ட கருப்பையா மற்றும் திருப்பதி ஆகியோர்களுக்கு மருத்துவமனையில் அனுமதித்து சிகிச்சை முதலுதவி சிகிச்சை அளித்த காரியாட்டிஅரசு மருத்துவர் சின்னகருப்பன் அவர்களை விசாரித்து மருதுவமனையில் அனுமதித்திற்கான விபத்த பதிவேடுகள் பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். கருப்பையா என்பவரின் விபத்து பதிவேடு நகல் **அ.சா.ஆ.7** ஆ க குறியீடு செய்யப்படுகிறது. திருப்பதி என்பவரின் விபத்து பதிவேடு நகல் **அ.சா.ஆ.8** ஆ க குறியீடு செய்யப்படுகிறது.

காயம் பட்ட இருவரும் மதுரையில் உள்ள தேவதாஸ் மருத்துவமனையில் சிகிச்சை எடுப்பதற்காக சென்றதால் 30.05.2019 அன்று மேற்படி இரு நபர்களுக்கு சிகிச்சை அளித்த தேவதாஸ் மருத்துவமனை மருத்துவர் திரு.சிதம்பரம் என்பரை விசாரித்து காய்ச்சான்றுகள் பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். கருப்பையா என்பவரின் காயச்சான்று **அ.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. திருப்பதி என்பவரின் காயச்சான்று **அ.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. திருப்பதி என்பவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று மருத்துவர் வழங்கிய சான்றின் அடிப்டையில் தெரிய வந்ததால், 30.05.2019 ம் தேதி ஏற்கனவே இருந்த சட்ட பிரிவுகளான 279,337 இ.த.ச வில் இருந்து 279,337,338 ஆக பிரிவு மாறுதல் செய்தேன். அந்த பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் எனது விசாரணையை முடித்து 30.05.2019 ம் தேதி எதிரி மீது 279,337,338 இ.த.ச ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

பொதுவாக தனியார் மருத்துவமனையில் நோயாளிகள் அதிக நாள் சிகிச்சை பெற்றால் தங்கள் மருத்துவமனைக்கு லாபம் அதிகம் வரும் என்ற நோக்கத்தில் சிறிய காயத்திற்கு கூட பெரிய காயம் போல் பல நாட்கள் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை அளிப்பார்கள் என்றால் சரியல்ல. இருசக்கர வாகனத்தை இயக்கிய நபர் யார் என்றால் அவர் பெயர் கருப்பையா ஆகும். மேற்படி நபருக்கு ஓட்டுனர் உரிமம் உள்ளதா என்பதை நான் விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால், அவருக்கு ஓட்டுனர் உரிமம் உள்ளது அதை நான் குற்ற இறுதி அறிக்கையில் தாக்கல் செய்துள்ளேன். நான் முதல் விசாரணையில் கூறியது போல் சொன்ன நாள், சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றும், காவல் நிலையத்தில் பின்னிட்டு வழக்கின் ஆவணங்களை தயார் செய்து, புகார்தாரர் இழப்பீடு பெற வேண்டும் என்ற நோக்கத்தில் கொடுத்த பொய்யான புகாருக்கு

ஆதரவாக எதிரி மீது தவறுதலாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை